DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 171/2012
Prosecution Witness PW 7
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பெரியகாமு | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 23.10.2024.**

எதிரிகள் ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது மதுரை, திருப்பரங்குன்றம் அரசுப்போக்குவரத்துக் கழக பணிமனையில் நடத்துநராக பணியாற்றி வருகிறேன். என்னுடைய பணி எண்.12867 ஆகும். கடந்த 14.07.2010 அன்று மதுரை பெரியார் நிலையத்திலிருந்து செக்கானூரணி நோக்கி TN 58 N 0810 என்ற பேருந்தை ஓட்டுநர் திரு. பெருமாள் (பணி எண்.5758) என்பவர் ஓட்டி வர நான் நடத்துநராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் தேவர் ஜெயந்தி விழா நடந்து கொண்டிருந்ததால் பிரச்சனையாக இருக்கும் என்று எங்கள் மேலதிகாரிகளின் அறிவுறுத்தலின்பேரில் சுமார் 14 பேருந்துகளை மொத்தமாக இயக்கினோம். நாங்கள் செக்கானூரணி நுழையும் இடத்தில் வடிவேல் தியேட்டர் அருகில் செல்லும்போது, என்னுடைய பேருந்தின் பின்புற கண்ணாடியை மொத்தமாக சிலர் கோஷம் போட்டுக்கொண்டே வந்து கல் எடுத்து ....

எறிந்து உடைத்து விட்டார்கள். மேற்படி நபர்கள் யார் என்பது எனக்குத் தெரியாது. நிர்வாகத்திற்கு தகவல் கொடுத்தேன். எங்கள் அதிகாரிகள் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்து வண்டியை பணிமனைக்கு கொண்டு வரச் சொல்லி அறிவுறுத்தினார்கள். நாங்கள் வண்டியை பணிமனைக்கு கொண்டு சென்றுவிட்டோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். யார் என்ன விபரம் எனக்கேட்டனர் நான் சொன்னேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை -

நான் மதுரை, திருப்பரங்குன்றம் கிளையில்தான் பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தினம் அன்று தேவர் ஜெயந்தி என்றால் சரிதான். தேவர் ஜெயந்தி 30.10.2017 என்றாலும் அன்றுதான் சம்பவம் நடந்ததென்றாலும் சரிதான். நாங்கள் மதுரை, திருப்பரங்குன்றத்திலிருந்து 08.40 மணியளவில் கிளம்பினோம். எங்கள் பேருந்தானது மதுரையிலிருந்து செக்கானூரணிக்கு சென்றதென்றால் சரிதான். மதுரையிலிருந்து செக்கானூரணி செல்லும்வரை சுமார் 10 பேருந்து நிறுத்தங்கள் வரை இருக்கும். சம்பவத்தன்று நாங்கள் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் சுமார் 09.30 ....

மணியளவில் சென்றிருப்போம். அ.சா. 1 அங்குச்சாமி மற்றும் மற்ற அதிகாரிகள்தான் எங்களின் பேருந்துகளை வழியனுப்பி விட்டனர் என்றால் சரிதான். செக்கானூரணியில் சம்பவம் நடந்தபின்பு அ.சா. 1 அங்குச்சாமி என்பவரிடம் தகவல் சொல்லி அவர் மதுரையிலிருந்து சம்பவ இடம் வந்தார் என்றால் சரிதான். அ.சா. 1 அங்குச்சாமி மதுரையிலிருந்து சம்பவ இடத்திற்கு எவ்வளவு மணிநேரத்தில் வந்தாரென்றால் சுமார் 1 மணி நேரத்தில் வந்தார். நான் சம்பவம் பற்றி சொல்லித்தான் மேற்படி அங்குச்சாமிக்கு அதுகுறித்த விபரம் தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தன்று 09.30 மணிக்கு செக்கானூரணி வடிவேல் தியேட்டர் அருகில் செல்லும்போது காவல்துறையினர் அதிகளவில் அந்தஇடத்தில் நின்றிருந்தனர் என்றால் சரிதான். யார் யார் பேருந்தின்மேல் கல் எறிந்தனர், எத்தனை பேர் வந்தனர் என்ற விபரம் குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். என்னுடைய வாக்குமூலத்தில் மதியம் 01.30 மணியளவில் நானும், அ.சா. 1 அங்குச்சாமி என்பவரும் செக்கானூரணி காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதியம் 01.30 க்கு நாங்கள் புகார் கொடுத்தபின்னிட்டுதான் முதல் தகவல்

அறிக்கையை பதிவு செய்துவிட்டு எங்களை போலீசார் போகச் சொல்லிவிட்டனர் என்றால் சரிதான். செக்கானூரணி காவல்நிலையத்தில் அ.சா. 1 அங்குச்சாமி புகாரை எழுதியதில் நான்தான் சாட்சிக் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். 30.10.2017 சம்பவம் நடந்த பின்பு 2 மாதங்கள் கழித்து காவல்துறையினர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றனர் என்றால் சரிதான். என் வாக்குமூலத்தில் சம்பவத்தைப் பற்றி எனக்கு நேரடியாத் தெரியாதென்றும், கல்லை யார் எறிந்தார்கள் என தெரியாதென்றும் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடம்போகும் போது அவ்விடத்தில் சுமார் 70 முதல் 80 பேருந்துகள் வரை இருந்ததென்றால் சரிதான். சம்பவ இடத்தில் எங்களுடைய பேருந்தில் இருந்த பயணிகளை போலீசார் விசாரித்தனரா என்றால் எனக்குத் தெரியாது. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எங்களது மேலதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி எதிரிகளுக்கும் ...

இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - பெரியகாமு.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.